IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No. 146 of 2021

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.நாகராஜ்

Date : 09.08.2024

**குறுக்கு விசாரணை**

நான் 1ம் வகுப்புவரை தான் படித்துள்ளேன். என் தாத்தா ரெட்டிபெருமாள் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு மூன்று மகன்கள். அவர்கள் பெயர் சின்னசாமி, கோவிந்தசாமி, குப்பன். ரெட்டிபெருமாளுக்கு சுமார் 75 சென்ட் நிலம் இருந்திருக்கும். என் தாத்தா அவருடைய 3 மகன்களுக்கும் தலா 25 சென்ட் பிரித்து கொடுத்து விட்டார். எப்போது கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எனது அப்பாவுக்கு 25 சென்ட் கொடுத்தார். நான் படிக்காததால் சர்வே எண் தெரியாது. வழக்கு சொத்திற்கு செக்குபந்தி வடக்கு, மேற்கு புறம்போக்கு நிலம், தெற்கு கோவிந்தசாமி, கிழக்கில் மாரியப்பன் நிலம். இதை தவிர ஊரில் நான் ஒரு காலி இடத்தை வாங்கினேன். அப்போது எனக்கு 35 வயதிருக்கும். அந்த சொத்தின் சர்வே எண் 332/43. அதன் அளவு 1500 சதுரடி. அந்த சொத்தை நான் 5 வருடத்திற்கு முன்பு விற்று விட்டேன். அந்த சொத்தை கரிமுட்டன் என்பவருக்கு விற்று விட்டேன். சர்வே எண் 332/43 மூல பத்திரம்

என்னிடத்தில் இல்லை. வாங்கிய நபர்களிடம் கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்திற்கு வேண்டுமானால் வாங்கிய நபர்களிடம் வாங்கி ஒப்படைக்கிறேன். நான் அந்த சொத்தை வாங்கவில்லை என்றாலும் அது எனது அப்பாவின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. என் அப்பா சோளகதிர், வெள்ளரிகாய் வியாபாரம், ஆடு மேய்ப்பார் என்றால் சரிதான். என் அப்பா தோட்டத்திற்கு சென்று கொள்முதல் செய்து அதை விற்பார் செய்வார். கொஞ்சநாள்கள் செய்தார். நான் என் அப்பாவுடன் ஆடு மேய்ப்பேன். குடும்பத்தில் உள்ள வருமான கணக்குகளை எனது அப்பா தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் பராமரித்து வந்தேன். 3, 4 வாதிகள் என்னுடைய தங்கைகள். திருமணத்திற்கு எனது அப்பா என் தங்கைகள் எதுவும் செய்யவில்லை. நான் தான் குடும்ப தலைவர் என்ற முறையில் செய்தேன். 1989ல் அதியமான்கோட்டை சர்வே எண் 876ல் 6 சென்ட் நிலமும், சர்வே எண் 872/2ல் 50 1/4 சென்ட் நிலம் நான் வாங்கினேன். கூட்டு குடும்ப சொத்து வருமானத்தில் இருந்து தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய தனிப்பட்ட வருமானத்தில் நான் வாங்கினேன். 1999ல் ஏ.ரெட்டிஅள்ளி கிராம சர்வே எண் 304/1ல் நஞ்சை ஏக்கர் 10 சென்ட் நிலமும், சர்வே எண் 304/2 நஞ்சை ஏக்கர் 48 சென்ட், சர்வே எண் 304/3ல் 22 சென்ட் நிலமும், சர்வே எண் 304/4ல் 12 சென்ட் நிலமும், சர்வே எண் 307/2ல் 21 சென்ட் நிலமும் ஆக மொத்தம்

ஒரு ஏக்கர் 13 சென்ட் நிலங்களை நான் சொந்தமாக சம்பாதித்து வாங்கினேன். நான் வாங்கியதாக சொல்வது தவறு என்றாலும் எனது அப்பா அவர் சம்பாதித்த சொத்தில் நான் ஒரே ஆண் மகன் என்பதால் என் பெயரில் மேற்சொன்ன சொத்துக்களை 1989லும், 1999லும் வாங்கினார் என்றால் சரியல்ல. 1999 வரை நாங்கள் கூட்டு குடும்பமாக தான் இருந்தோம். ஆனால் நான் சொத்துக்களை ஆடு மேய்த்து வந்த வருமானத்தில் இருந்து வாங்கினேன். எனக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும் என் அப்பா தான் என் பெயரில் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு 55 வயதிருக்கும். 1989ல் நான் மைனர். நான் மைனர் என்பதால் எனக்கு சொத்துக்கள் வாங்குவதற்கு வருமானமே இல்லை என்றால் சரியல்ல.

2) என்னுடைய மகன்கள் பெயர் சின்னசாமி, பெருமாள். என்னிடம் காட்டப்படும் 16.12.2020 கிரைய பத்திரம் படி நான் 1999ல் கிரைய பத்திரம் படி நான் வாங்கிய சொத்துக்களை நான் எனது மகனுக்கு கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நகல். 16.12.2020ல் நான் 1989ல் வாங்கிய சொத்துக்களை ரெட்டிசின்னசாமி என்பவருக்கு விற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது பிள்ளைகளின் படிப்பிற்காக விற்றுவிட்டேன். 2020ல் 1ம் பிரதிவாதிக்கு வயது 30 இருக்கும். என்னுடைய இன்னொரு மகன் பெருமாளுக்கு

அப்போது 25 வயதிருக்கும். பெரிய மகன் அப்போது இன்ஜினியரிங் படித்தார். சின்னமகன் டிப்ளமோ படித்தார். 2020ல்அவர்கள் படிக்கவே இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)